1993 ஏப்ரல் 29]

கின்ற காரணத்தினால் அங்கே இருக்கின்ற மொத்தத் தறிகள் 100, அதிலே பத்தே பத்து தறிகளில் உள்ளவர்கள் மட்டுமே அங்கே பணியாற்றுவதற்காக வருகிறார்கள். மற்றவர்கள் தொழிலுக்கு தொடர்ந்து வருவதில்லை. ஆதலால்தான் நஷ்டத்திற்குக் காரணம். கைத்தறி துறையின் சார்பில் அனைத்து சலுகைகளும் செய்யப்படுகின்றன. அவ்வப்போது அவர்களுக்காக செய்யப்படுகிறது அனைத்து சலுகைகளும். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் முயற்சித்து, அவர்களுடைய முயற்சியால் இந்த அரசு அறிவித்திருக்கிற சிறப்பானத் திட்டங்களை எடுத்துரைத்து அவர்கள் தொடர்ந்து பணியாற்றுவதற்கு, அந்த 90 பேர்கள் வருவதற்கு, இவர்கள் முயற்சித்தால் முடியாதது ஒன்றும் இல்லை. அந்த 90 உறுப்பினர்களைச் சந்தித்து அவர்களுக்கு விளக்கத்தை தந்து அவர்கள் தொடர்ந்து பணிக்கு வருவதற்குரிய முயற்சிகளை மேற்கொள்வார்களானால் அவர்கள் ஓய்வுபெறுகின்றபோது அவர்களுக்கு பென்சன் திட்டம் இருக்கிறது, மற்ற திட்டங்கள் இருக்கின்றன. இன்சுரன்ஸ் திட்டம் இருக்கிறது. எல்லா சலுகைகளும் இருக்கின்றன. அவர்களுக்கு அவை கிடைக்கும். ஆகவே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களே முயற்சித்து அவர்கள் தொடர்ந்து பணிக்கு வருவதற்குரிய வாய்ப்பினை உருவாக்கித் தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

முற்பகல் 10-40

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண் 528, திரு. எம். கே. பாலன், மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர்.

528—

ஈக்காட்டுத்தாங்கல் நேரு சாலையிலுள்ள பாலத்தை மேம்பாலமாக விரிவுபடுத்தல்.

* 9545—திரு. எம். கே. பாலன் :

மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சென்னை, ஈக்காட்டுத்தாங்கல் நேரு சாலையில் உள்ள பாலத்தை மேம்பாலமாக விரிவுப்படுத்த அரசிடம் செயற் குறிப்பு உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், எப்போது ?

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன், பொதுப்பணித்துறை அமைச்சர் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ): இப்பால வேலைக்கான பணிகள் பிப்ரவரி 1992-ல் துவக்கப்பட்டு நல்ல முன்னேற்றத்தில் உள்ளன என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. எம். கே. பாலன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஈக்காட்டுத் தாங்கல் நேரு சாலையிலுள்ள பாலத்தில் அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டதை போன்று வேலை துவங்கப் பட்டுள்ளது. நான் சட்டமன்ற உறுப்பினரான உடன் என்னுடைய கோரிக்கையை தமிழக அரசு ஏற்று - குறிப்பாக தமிழகத்தினுடைய முதலமைச்சர் எங்களுடைய இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்களுக்கும், பொதுப்பணித் துறையை சார்ந்த அமைச்சருக்கும் என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொண்டு, இந்தப் பாலம் கட்டுவதற்கான நிதி ஒதுக்கீடு எவ்வளவு? எவ்வளவு காலத்தில் முடிப்பதற்கான நிர்பந்தம் உள்ளது ? எப்போது பணி முடியும் ? பொதுமக்கள் உபயோகத்திற்கு எப்போது திறந்துவிடப்படும் என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இப்பாலத்தினுடைய திட்ட மதிப்பீடு 2 கோடியே 70 லட்சம் ரூபாய். இந்தப் பணி 3-2-1992ல் துவக்கப்பட்டிருக்கிறது. இந்தப் பணியை முடிப்பதற்கான காலக்கெடு 2-8-1993 என்று நிர்ணயிக்கப்பட்டிருக்கிறது. ஆகவே, அந்தப் பணி குறித்த காலத்தில் முடிக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண் 529 டாக்டர் பெ. வீரபாண்டியன், மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர்.

529—

நீப்பத்துறை - ராவந்தவாடி ஓடையின் குறுக்கே பாலம் அமைத்தல்.

* 12097—டாக்டர் பெ. வீரபாண்டியன் :

மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) செங்கம் தொகுதி, நீப்பத்துறைக்கும் ராவந்தவாடிக்கும் இடையே உள்ள ஓடையினால் போக்குவரத்து பாதிப்பதை அரசு அறியுமா ?

(ஆ) ஆம் எனில், ஓடையின் குறுக்கே பாலம் அமைக்க அரசு நடவடிக்கை எடுக்குமா ?